www.Padasalai.Net www.CBSEtips.in

KANCHIPURAM DT

# முதல் இடைப்பருவ பொதுத்தேர்வு - 2023

A

பன்னிரெண்டாம் வகுப்பு

பதிவு எண் :

## வணிகவியல்

நேரம் : 1.30 மணி

பகுதி - அ

மதிப்பெண்கள் : 50

10 x 1 = 10

I. சரியான விடையைத் தேர்ந்தெடுத்து எழுதுக.

1. வேலையை பலவேறு சிறு பணிகளாக பிரிப்பது ______ என்பர்.

அ) ஒழுங்கு ஆ) பயன்பாடு

இ) வேலைப் பகிர்வு ஈ) சமத்துவம்

2. மேலாண்மை என்பது ______ ன் செயல் ஆகும்.

அ) மேலாளர் ஆ) கீழ்ப்பணியாளர்

இ) மேற்பார்வையாளர் ஈ) உயரதிகாரி

3. ______ ல் நிர்வாக செயல்பாடுகளும் உள்ளடங்கியுள்ளது.

அ) ஒருங்கிணைத்தல் ஆ) கட்டுப்படுத்துதல்

இ) பணியமர்த்துதல் ஈ) ஒழுங்கமைத்தல்

4. ______ உதவியால் அதிகாரப்பகிர்வு எளிதாக செய்யப்படுகிறது.

அ) முதுகலை வணிக மேலாண்மை ஆ) விதிவிலக்கு மேலாண்மை

இ) குறியிலக்கு மேலாண்மை ஈ) முதுகலை வணிக நிர்வாகம்

5. ஒரு இரண்டாம் நிலைச் சந்தையில் ஒரு பத்திரம் எத்தனை முறை விற்கப்படலாம்?.

அ) ஒரே ஒரு முறை ஆ) இரண்டு முறை

இ) மூன்று முறை ஈ) பல முறை

6. மூலதனச் சந்தையின் பங்கேற்பாளர் ______ ஆவர்.

அ) தனிநபர் ஆ) நிறுமங்கள்

இ) நிதிநிறுவனங்கள் ஈ) மேலே உள்ள அனைத்தும்

7. சந்தைப்படுத்தக்கூடிய உரிமையியலான ஆவணம், காலமுறை வைப்பாக ஒரு குறிப்பிட்ட காலத்திற்கு எனக் குறிப்பிடப்படும் ஆவணத்தை ______ எனக் குறிப்பிடுகிறோம்.

அ) கருவூல இரசீது ஆ) வைப்புச் சான்றிதழ்

இ) வணிக இரசீது ஈ) அரசுப் பத்திரங்கள்

8. குறியிலக்கு மேலாண்மை செயல்முறையின் முதல்நிலை எது?

அ) முக்கிய முடிவு பகுதியை நிர்ணயிப்பது

ஆ) நடவடிக்கைகளை மதிப்பீடு செய்வது

இ) குறிக்கோள்களுடன் வளங்களைப் பொருத்துவது

ஈ) அமைப்பின் குறிக்கோள்களை வரையறுப்பது

9. உடனடிச் சந்தை என்பது நிதிக் கருவிகளை விநியோகம் செய்வதும் மற்றும் ரொக்கம் செலுத்துவதும் ______ நடைபெறும் ஒரு சந்தை ஆகும்.

அ) உடனடியாக ஆ) எதிர்காலத்தில்

இ) நிலையானது ஈ) ஒரு மாதத்திற்கு பின்னர்

10. அழைப்பு பணச்சந்தையில் முதலீடு செய்யும் பணத்திற்கு ______ உடன் அதிக நீர்மத்தன்மையை வழங்குகிறது.

அ) குறைந்த இலாபத்தன்மை ஆ) உயர் இலாபத்தன்மை

இ) வரையறுக்கப்பட்ட இலாபத்தன்மை ஈ) நடுத்தர இலாபத்தன்மை

Kindly send me your study materials to padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.CBSEtips.in



## பகுதி - ஆ

II. எவையேனும் 5 வினாக்களுக்கு விடையளி. (வினா எண் 17 கட்டாய வினா) 5 x 2 = 10

11. அதிகாரம் என்பதன் பொருள் தருக.
12. திட்டமிடுதல் என்றால் என்ன?
13. விதிவிலக்கு மேலாண்மையின் பொருளை எடுத்துக் கூறுக.
14. அமைப்பு நிறுவனங்களின் கூறுகள் யாவை?
15. OTCEI - சிறுகுறிப்பு வரைக.
16. ஏலமிடுதல் என்பதன் பொருள் யாது?
17. மேற்பார்வை வீச்செல்லை என்பதன் பொருள் யாது?

## பகுதி - இ

III. எவையேனும் 5 வினாக்களுக்கு விடையளி. (வினா எண் 24 கட்டாய வினா) 5 x 3 = 15

18. மேலாண்மையை நிர்வாகத்திலிருந்து வேறுபடுத்துக. (ஏதேனும் மூன்று)
19. மேலாண்மையின் முதன்மைப் பணிகளை பட்டியலிடுக.
20. குறியிலக்கு மேலாண்மையின் ஏதேனும் மூன்று செயல்முறைகளைப் பட்டியலிடுக.
21. இரண்டாம் நிலைச்சந்தை - சிறுகுறிப்பு வரைக.
22. ஏட்டுக்கடன் மற்றும் துணிகர முதல் வழங்கு நிறுவனங்களைப் பற்றி விளக்குக.
23. பணச் சந்தையில் ஈடுபடும் பங்கேற்பாளர்கள் யாவர்? (ஏதேனும் மூன்று)
24. பணியமர்த்தலின் முக்கியத்துவம் பற்றி கூறுக.

## பகுதி - ஈ

IV. அனைத்து வினாக்களுக்கும் விடையளி. 3 x 5 = 15

25. அ) நவீன மேலாண்மைக் கோட்பாடுகளை விவரி. (ஏதேனும் ஐந்து)

*(அல்லது)*

ஆ) பணச் சந்தை மற்றும் மூலதனச் சந்தை இரண்டிற்கும் இடையேயான வேறுபாடுகளை விவரி. (ஏதேனும் ஐந்து)

26. அ) மேலாண்மையின் பல்வேறு பணிகளை விளக்குக. (ஏதேனும் ஐந்து)

*(அல்லது)*

ஆ) மூலதனச் சந்தையின் சிறப்பியல்புகளை விளக்குக.

27. அ) குறியிலக்கு மேலாண்மையின் முக்கிய நன்மைகள் யாவை? (ஏதேனும் ஐந்து)

*(அல்லது)*

ஆ) பல்வேறு வகையான நிதிச்சந்தைகளை விவரி. (ஏதேனும் ஐந்து)

******

Kindly send me your study materials to padasalai.net@gmail.com